## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.
## சி.சி. 135/2021

2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 6 வது நபாின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விமல்குமார் | வயது | 33 |
| த.பெ.(அ)க.பெ. | சுப்பிரமணி | தொழில் | ரயில்வே கான்ராக்டர் |
| ஊர்/பணிபுரியுமிடம் | ஜோலார்பேட்டை | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

(1) நான் ஜோலார்பேட்டையில் வசிக்கிறேன். நான் ரயில்வே கான்ராக்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கோமதி எனது தங்கை. ஆஜர் எதிரி எனது தங்கையின் கணவர்.எனது தங்கைக்கும் எதிரிக்கும் கடந்த 05.06.2017 அன்று திருப்பத்துார் ஜேவிஆர் மஹாலில் திருமணம் நடந்தது. எனது தங்கைக்கு 10 சவரன் நகை போட்டு எதிரிக்கு பல்சர் 180சிசி இருசக்கர வாகனம் எடுத்து கொடுத்தோம். எதிரிக்கு 2-1/2 சவரன் நகை போட்டோம். திருமணத்திற்கு பிறகு இருவரும் ஒரு வருடம் நன்றாக தான் வாழ்ந்து வந்தார்கள். அதன்பிறகு 2018ம் வருடம் நிலத்தில் போர் போட வேண்டும் என்று சொல்லி பணம் கேட்டதால் நான் ஒரு லட்ச ருபாய் சீட்டு எடுத்து கொடுத்தேன். போர் போட்டு நன்றாக தான் விவசாயம் செய்து வந்தார். இந்நிலையில் மாட்டு வியாபாரம் செய்யவேண்டும் என்றும், மாடு வாங்க வேண்டும் என்றும், மீண்டும் மீண்டும் பணம் கேட்டு என் தங்கையை அடித்து தொந்தரவு செய்து வந்தார்.

(2) பின்னர் எதிரியின் கொடுமை அதிகமாகவே நாங்கள் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அங்கு எதிரியை அழைத்து நன்றாக வாழ அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்கள். அதன்பிறகு 4, 5 மாதங்கள் அவரது கணவர் வீட்டில் வாழ்ந்து வந்தார். அதன்பிறகு ஒருநாள் எனது தங்கையை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்து இங்கே சிறிது நாட்கள் இருக்கட்டும் என்று கூறி விட்டுச்சென்றார். ஆனால் அதன்பிறகு அவர் எனது தங்கையை அழைத்து செல்லவில்லை. போன் செய்தாலும் எடுக்கவில்லை. எனவே நான் எனது

அக்கா, எனது மாமா சென்று எதிரியின் வீட்டில் விசாரித்தோம். ஆனால் அப்போது அவர் அங்கில்லை. அதன்பிறகு அக்கம் பக்கத்தில் விசாரித்தோம். அவர்கள் எதிரியை பார்த்தே நிறைய நாட்கள் ஆகிவிட்டது என்றும், அவர் இங்கு இல்லை என்றும் கூறினார்கள்.

(3) எதிரியின் செல்போனுக்கு தொடர்பு கொள்ளமுயற்சித்தோம். ஆனால் அவர் ஸ்விட்ச்ஆப் செய்து வைத்திருந்தார். 21.08.2020 அன்று எதிரியின் செல்போனில் வாட்ஸ்ஆப்பில் ஒரு ஸ்டேட்டஸ் வைத்திருந்தார். அதில் அவர் வேறொரு பெண்ணை திருமணம் செய்துள்ளார் என தெரிந்தது. பின்னர் நாங்கள் அதுகுறித்து விசாரித்தோம். அதில் எதிரி போச்சம்பள்ளியை சார்ந்த கந்தசாமியின் மகள் சுபாஷினி என்பவரை 2 வதாக திருணம் செய்துள்ளார் என்று உறுதியானது. சுபாஷினி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணி செய்கிறார் என்பது விசாரணையில் தெரிந்தது. அதன்பிறகு எனது தங்கை அ.சா.1 எதிரி மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

(1) என் பெயர் வினோத்குமார், விமல்குமார் என்றும் என்னை அழைப்பார்கள். என்னுடைய ஆதார் கார்டு மற்றும் பள்ளி சான்றிதழ்களில் வினோத்குமார் என்றுதான் உள்ளது என்றால் சரிதான். விமல்குமார் என்றும், வினோத்குமார் என்றும் என்னை அழைப்பார்கள். விமல்குமார் என்று போலீஸாரிடம் சொன்னதால் அவர்கள் அப்படி என்பெயர் டைப் செய்துள்ளார்கள். நான் முதல் விசாரணையில் எதிரிக்கு பல்சர் வாகனம் வாங்கி கொடுத்ததாக சொல்வதை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். எதிரிக்கு 2-1/2 பவுன் நகை போட்ட விஷயத்தையும் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது தங்கைக்கு குழந்தை பிறந்தும் எதிரி வீட்டில் தான் வாழ்ந்தார் என்றால் சரிதான்.

(2) குழந்தை பிறந்த செலவுகளையும் எதிரி தான் பார்த்தார் என்றால் அரசு மருத்துவமனையில் குழந்தை பிறந்தது இருந்தாலும் எதிரிதான் பார்த்தார். குழந்தை பிறந்தவுடன் எதிரி எனது தங்கையை அவர் வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டார் என்றால் சரிதான், குழந்தை பிறந்த அன்றே மருத்துவமனையில் பிரச்சனை செய்து அழைத்து சென்றார். மேறபடி பிரச்சனையை நான் நேரடையாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல, நான் அன்றைய தினம் மருத்துவமனையில் இருந்தேன். மேற்படி எதிரி மருத்துவமனையில் பிரச்சனை செய்தது சம்மந்தமாக நாங்கள் மருத்துவரிடமோ,

போலீஸிலோ புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். என் தங்கைக்கு சுகபிரசவம் என்றால் சரிதான், மைனர் ஆபரேஷன் செய்தார்கள்.

(3) மைனர் ஆபரேஷன் என்றால் மருத்துவர் அப்படி சொன்னார் அதனால் அப்படி சொன்னேன். என் தங்கைக்கு சுகபிரசவம் என்பதால் மருத்துவமனையிலிருந்து அன்றைய தினமே எதிரி அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்றார் என்றால் மருத்துவர் மைனர் ஆபரேஷன் என்று சொன்னதால் சொன்னேன். அப்படி எந்த ஆபரேஷனும் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் தங்கையை அழைத்து சென்று குழந்தையுடன் நல்லபடியாக தான் வைத்திருந்தார் என்றால் இல்லை.

(4) எதிரி என் தங்கை மீது வைத்திருந்த பாசத்தினால்தான் தலைபிரசவத்திற்கும் தாய் வீட்டிற்கு செல்லவிடாமல் எதிரி தனது வீட்டிலேயே பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் ஜோலார்பேட்டையில் விஸ்வா என்பவரிடம் சீட்டு எடுத்துக்கொடுத்தேன். அந்த விஸ்வாவை சாட்சியாக விசாரிக்கிறிர்களா என்றால் விசாரிப்போம். அவரிடம் சீட்டு கட்டியதற்கான அத்தாட்சி ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எதிரி 2018 ம் வருடம் போர் போட ஒரு லட்சம் ருபாய் கேட்டார் என்று இந்த வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. நான் போலீஸாரிடம் மேற்படி விஷயத்தை கூறியுள்ளேன். எனது தங்கையை காவல் நிலையத்தில் விசாரித்த பின்பு வீட்டு அருகே வந்து விசாரித்தார்கள். முதல்முதலில் என் தங்கையை எப்போது விசாரித்தார்கள் என்றால் இரண்டுமுறை புகார் கொடுத்தோம், இரண்டு முறை விசாரித்தார்கள்.

(5) நான் தற்போது எதிரி 2வது திருமணம் செய்து கொண்டபோது கொடுத்த புகாருக்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் எதிரி செல்போன் எண்ணில் வாட்ஸ்ஆப் ஸ்டேட்டஸ் வைத்திருந்தார் என்று சொன்னதை போலீஸ் விசாரணையில் சொல்லியிருந்தேன். எங்கள் இருவரின் செல்போன் எண்ணையும் போலீஸாரிடம் சொல்லியிருந்தேன்.நான் முதல் விசாரணையில் அந்த பெண் செவிலியராக வேலை செய்கிறார் என்பதை போலீஸாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை அதை கோவிந்தராஜ் தான் போலீஸாரிடம் சொன்னார்.அதை அவர் எப்போது எந்த மாதம், வருடம் தேதியில் சொன்னார் என்றால் நாங்கள் புகார் கொடுத்த அன்று சொன்னார். நான் தான் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம்.

(6) எனது அக்கா, மாமா, நானும் அனைவரும் சேர்ந்து மேற்படி 2 வது திருமண சங்கதிகள் குறித்து எதிரியிடம் கேட்ட விஷயத்தை போலீஸாரிடம் சொல்லியுள்ளேன். எனது தங்கையுடன் சேர்ந்து வாழ சொல்லி எதிரி எங்களிடம் பஞ்சாயத்து பேசினார்களா என்றால் ஊர்கவுண்டரை அழைத்து வந்து பேசி சமாதானம் செய்து அழைத்து சென்றார். அன்று எந்த வீட்டில் உள்ளாரோ அந்த வீட்டில்தான் உள்ளாரா என்றால் இல்லை அவர் நிலத்தில் வீடு கட்டியுள்ளார். அதற்கான ஆவணத்தை நான் போலீஸாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது தங்கை பஞ்சாயத்தில் தனிகுடித்தனம் வைக்கசொன்னாரா என்றால் இல்லை. எதிரிக்கு எந்த கெட்ட பழக்கமும் இல்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நாங்கள் விசாரித்து தான் திருமணம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான்.

(7) எதிரி மாட்டு வியாபாரம் செய்ய பணம் கேட்டதை நான் போலீஸாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது தங்கைக்கு 2018 ல் குழந்தை பிறந்தவுடன் அங்கு சென்று 3 மாதம் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு என் வீட்டில் கொண்டு வந்து எனது தங்கையை விட்டு சென்ற பின்பு அவர்கள் இருவருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சிலநாட்கள் போனில் பேசிக்கொண்டிருந்தார், வந்து பார்த்து விட்டும் செல்வார். அதை நான் போலீஸாரிம் சொல்லியுள்ளேன். குழந்தை பிறந்து எங்கள் வீட்டில் விட்ட பின்பு மீண்டும் அழைத்து செல்லவில்லை என்றால் இல்லை 2019 ல் அழைத்து சென்றார். தற்போது சாட்சி மீண்டும் எதிரி குழந்தை பிறந்து எங்கள் வீட்டில் விட்டு சென்றவர் இன்றுவரை அழைத்து செல்லவில்லை என்கிறார்.

(8) மேற்படி சங்கதியை போலீஸாரிடம் சொல்லியுள்ளேன். என் தங்கையை எதிரி நன்றாக தான் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன அனைத்து சங்கதிகளும் தவறானவை என்றால் சரியல்ல. 2ம் திருமணம் செய்து கொள்கிறார் என்றும், வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. பாதிக்கப்பட்ட நபர் எனது தங்கை என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை= இல்லை